**ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், பிரம்மதேசம் ஊராட்சி மன்றம், தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் முன்னிலை : திரு. S. முனுசாமி அவர்கள்,**

பொருள் : மனைப்பிரிவு- ஈரோடு மாவட்டம்- அந்தியூர் வட்டம் - அந்தியூர் ஊராட்சி ஒன்றியம்- பிரம்மதேசம் ஊராட்சி மற்றும் கிராமம் ச.எண்: 654/2Bல் 2.45 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப அனுமதி வழங்கி உத்தரவிடுதல் தொடர்பாக.

பார்வை : 1. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் : 04.05.2017
2. அரசாணை எண். 18 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UDE4(3))த்துறை நாள் : 04.02.2019
3. அரசாணை எண்.138. வீடு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UDE4(3))த்துறை நாள் : 04.060.2004
4. உதவி இயக்குனர், ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு, அவர்களின் ந.க. எண் : 3892/2021 நாமா நாள் : 11.10.2021

**உத்திரவு -**

பார்வை 4 ல் கண்ட உதவி இயக்குனர், ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு அனுமதி கடிதத்தின் படி, ஈரோடு மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பிரம்மதேசம் ஊராட்சியில் கிராம ச.எண்: 654/2Bல் 2.45 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனை உட்பிரிவிற்கு ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களால் சில நிபந்தனைகளின் படி குடியிருப்பு மனை உட்பிரிவிற்கான SWP/DTCP/ERODE/LAYOUT/APPROVAL NO: 467/2023 என்ற எண்ணிடப்பட்டு உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேலும், ஈரோடு மாவட்டம் அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், பிரம்மதேசம் ஊராட்சி கிராம ச.எண்: 654/2Bல் 2.45 ஏக்கர் பரப்பளவில் உள்ள நிலமானது ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அலுவலகத்தால் வகைப்படுத்தப்படாத (Unclassified Area) பகுதியில் அமைகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>உத்தேச மனை உட்பிரிவிற்கான பரப்பு :</u>**

**9920.00 ச.மீ (அ) 2.45 ஏக்கர்**

மேற்காணும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமையும் (எவர் கிரீன் சிட்டி) இடத்திற்கு மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்டு ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற குடியிருப்பு மனை உட்பிரிவு வரைபடம் முழுமையாக பரிசீலனை செய்யப்பட்டு பார்வை-3 ல் காணும் அரசாணையின் படி மேற்கண்ட இடத்திற்கு 3% சந்தை மதிப்பிற்கு கட்டணம் செலுத்தவேண்டும் என தெரிவித்ததின் படி மனுதாரர் கீழ்கண்ட கணக்கு தலைப்பில் பின்வருமாறு கட்டணம் செலுத்தியுள்ளார்.

ஒப்புதல் கோரும் மனையிடத்திற்கான கட்டணம்

Land Conversion Charges: Rs. 51000/- Dt. 17/08/2023

Scrutiny Charges: Rs. 14880/- Dt. 20/09/2023

OSR Charges: Rs. 194132/- Dt. 10/11/2023

Centage Charges: Rs. 15000/- Dt. 17/11/2023

Display Board Charges: Rs. 10000/- Dt. 17/11/2023

Scrutiny Fees Rs. 1000/- Receipt No 56946 Dt 7-1-2024

Development Charge Rs. 44000/- Receipt No: 56946 Dt: 7-1-2024

தற்சமயம், மேற்படி அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், பிரம்மதேசம் ஊராட்சி மற்றும் கிராம ச.எண்: 654/2Bல் 2.45 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ள இடத்திற்கு பிரம்மதேசம் ஊராட்சி மன்றம், கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஊராட்சி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

Scanned with OKEN Scanner

Scanned with OKEN Scanner

**நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகள் :**

1. பார்வை 4 ல் காணும் உதவி இயக்குனர், ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு, அவர்களின் உத்தேச மனையிட தொழில் நுட்ப ஒப்புதல் கடிதத்தில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்றப்பட வேண்டும்.
2. உத்தேச மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்தில் உள்ள அளவு விபரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றியமைத்தல் கூடாது.
3. ஒப்புதல் வழங்கப்படும் மனையிடம் குடியிருப்பு வீடுகள் அமைப்பதற்கு மட்டும் அனுமதிக்கப்படுகிறது அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலை ஏதும் ஏற்படுத்த அனுமதியில்லை.
4. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து செலுத்த வேண்டி இருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்பட்டால், உரிய தொகையினை மனுதாரர் செலுத்த வேண்டும்.
5. அரசின் கொள்கை அளவிலான மனை ஒப்புதலில் அரசு மாற்றம் ஏதேனும் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால், அந்த உத்திரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவர் ஆவார்.
6. பத்திரப்பதிவு மற்றும் நில உரிமை தொடர்பாக ஏற்படுத்தப்படும் சிவில் மற்றும் இதர வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.
7. திறந்த வெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வாயிலாக, மனுதாரரால் விற்பனை செய்யப்பட உள்ள மனை நிலங்களுக்காக உயர் அழுத்த / சாதாரண மின் அழுத்த மின்சார பாதை (லைன்) அமைத்து மின்வசதி செய்து கொள்ள அனுமதி இல்லை.
8. விற்பனை செய்யப்படாத ஒவ்வொரு மனைப்பிரிவும், பத்திரப்பதிவு செய்யும் போது. மனைப்பிரிவு அங்கீகார வரைபடம் நகலினை இணைத்து பத்திர பதிவு செய்திட வேண்டும்.
9. மேற்குறிப்பிட்ட நிபந்தனையை மீறினாலோ, மனுதாரர்கள் அளிக்கப்பட்ட விபரங்கள் சரியானவை அல்ல என்று ஏதேனும் பின்னர் வரும் காலங்களில் அறியப்பட்டாலோ அல்லது அரசு விதிமுறைகள் மீறப்பட்டாலோ இம்மனை ஒப்புதல் முன்னறிவிப்பு இன்றி ரத்து செய்ய ஏதுவாகும் என அறிவிக்கப்படுகிறது.

7/2/2024

தலைவர் / நிர்வாக அதிகாரி,
பிரம்மதேசம் ஊராட்சி,
அந்தியூர் வட்டாரம்.

தலைவர்
பிரம்மதேசம் ஊராட்சி
அந்தியூர் ஊராட்சி ஒன்றியம்

பெறுதல் :

N. சுந்தர்ராஜூ மற்றும் ஒருவர்,

2/54F, ரெட்டிபாளையம்,

மேட்டாங்காடு (Po), தேவூர் (வழி),

சங்ககிரி (Tk), சேலம் (Dt),

பின்: 637104.

நகல்,

1. உதவி இயக்குனர், ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு அவர்களுக்கு.
2. சார்பதிவாளர், அந்தியூர் அலுவலகம் ஈரோடு மாவட்டம்.
3. வட்டாரவளர்ச்சி அலுவலர் அந்தியூர் ஊராட்சி ஒன்றியம்.

Scanned with OKEN Scanner

Scanned with OKEN Scanner